بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/02/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பு
- ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் பல்வேறு உலக விவகாரங்கள் தொடர்பாக நிகழ்த்திய அகப்பார்வைக்கு ஒளியூட்டும் சொற்பொழிவுகளின் அறிமுகம்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

நேற்றைய தினம் பிப்ரவரி 20 ஆம் தேதியாகும். இந்த நாள் (அஹ்மதிய்யா) ஜமாஅத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பு என்ற வகையில் அறியப்படுகின்றது. இந்த நாளிலோ அல்லது இது தொடர்பாக இந்நாட்களிலோ, முந்தைய நாட்களிலோ, பிந்தைய நாட்களிலோ ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தினம் என்ற பெயரில் ஜமாஅத்துகளில் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறங்கிய நீண்ட முன்னறிவிப்பில் ஒரு மகனுடைய பிறப்பைக் குறித்தும் அந்த மகனுடைய சிறப்பைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது. 20 பிப்ரவரி 1886 இல் அது பிரசுரம் வடிவில் வெளியிடப்பட்டது. அந்த முன்னறிவிப்பில் மகனுடைய சிறப்பைக் குறித்து கூறப்படும்போது இல்ஹாமிய சொற்களின் ஒரு பகுதியில், அவர் மிகுந்த புத்தி கூர்மை உள்ளவராகவும் சிந்தித்து புரியும் ஆற்றல் உள்ளவராகவும் இருப்பார் என்றும், பௌதிக ஆன்மிக ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார் என்றும் கூறப்பட்டுள்ளது. இதற்கேற்ப அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு மகனை வழங்கினான். அவர் இந்த சிறப்பம்சங்களுக்கு சொந்தக்காரராக திகழ்ந்தார். அவருடைய பெயர் பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஆகும். முஸ்லிஹ் மவ்வூது என்றும் அவர் அழைக்கப்படுகிறார்.

பௌதிக மற்றும் ஆன்மிக ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார் என்று முன்னறிவிப்பின் சொற்களில் இருப்பதைப் போன்று இறைவனே அவருடைய அறிவை பிரகாசிக்கச் செய்து ஞானங்களால் நிரப்பினான். உலகப் பாடங்களைப் பொறுத்தவரை அன்னார் மிக பலவீனமானவராக இருந்தார்கள். ஆனால், அல்லாஹ் அன்னாரின் மூலமாக எவ்வாறான அறிவார்ந்த, மார்க்க ரீதியிலான, நிர்வாக வேலைகளை செய்ய வைத்தான் என்றால் படித்த பெரும் பெரும் அறிஞர்கள் கூட அன்னாருக்கு முன்னால் சிறு பிள்ளைகளாகத்தான் தெரிந்தார்கள். அன்னாருடைய 52 வருட கிலாஃபத் கால கட்டம் இதை பறை சாற்றும் சான்றாக திகழ்கின்றது. அன்னார் பல்வேறு உலக விவகாரங்களைக் குறித்து எண்ணற்ற சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்கள்; கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். மார்க்கம் தொடர்பாகவும் திருக்குர்ஆனுடைய ஞானங்கள் தொடர்பாகவும் கூறவேண்டுமென்றால் அவை அளவிடமுடியாத அளவில் உள்ளது. அன்னார் உலக விஷயங்கள் தொடர்பாகவும், உள்நாட்டு பன்னாட்டு அரசியல் தொடர்பாகவும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்கள்; கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். வரலாறு தொடர்பாக அசாதாரமான தரத்தையுடைய கட்டுரைகளை எழுதியுள்ளார்கள்; சொற்பொழிவுகளை

நிகழ்த்தியுள்ளார்கள். பொருளாதாரம் தொடர்பாகவும் உலகின் பல்வேறு அமைப்புகள் தொடர்பாகவும், socialism (சமூகவுடைமை), communism (பொதுவுடைமை), capitalism (முதலாளித்துவம்) ஆகியவை குறித்தும் பகுப்பாய்வு செய்துள்ளார்கள்; சொற்பொழிவாற்றியுள்ளார்கள். பிறகு, இது நூல் வடிவிலும் வெளியாகியுள்ளது. இது ஜமாஅத்தின் இலக்கியங்களிலும் காணக்கிடைக்கிறது. இன்னும் கூறவேண்டுமென்றால், இராணுவ விவகாரங்கள் தொடர்பாகவும், விஞ்ஞானம் மற்றும் கல்வி தொடர்பாகவும் எவ்வாறான அறிவார்ந்த ஞானமிகு விஷயங்களை கூறியுள்ளார்கள் என்றால் அதைக் கண்டு மனிதன் வியப்படைந்து விடுகின்றான்.

நான் சில விஷயங்களை இங்கு அறிமுகம் செய்தல் என்ற வகையில் மட்டுமே எடுத்து வைக்கிறேன். “துருக்கியின் எதிர்காலமும் முஸ்லிம்களின் கடமைகளும்” என்ற தலைப்பில் அன்னார் ஓர் ஆலோசனையை எடுத்து வைத்து அதைக் குறித்து தன் கருத்தை தெரிவித்தார்கள். இது அன்னாருடைய கிலாஃபத்தின் ஆரம்ப காலகட்டமான 1919 ஆம் ஆண்டில் நடந்த விஷயமாகும். இதன் விபரம் என்னவென்றால், துருக்கிய ஆட்சி ஆபத்தான நிலையில் இருந்தபோது 1919 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 அன்று சமுதாய ஒற்றுமையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலிருந்தும் முழுமையாக பயனடைவதற்காக அறிவுப்பூர்வமாக வழிகாட்டியவாறு அன்னார் இந்த நூலை எழுதினார்கள். பல்வேறு சிந்தனைகளைக் கொண்டுள்ள முஸ்லிம்களின் ஒற்றுமைக்காகவும் ஒருமைப் பாட்டிற்காகவும் அன்னார் அடிப்படையான வழிகாட்டல்களை வழங்கியவாறு, ‘எனது பார்வையில் இந்த மாநாட்டின் அடித்தளம் என்னவாக இருக்க வேண்டுமென்றால் (அதாவது, துருக்கிக்கு சாதகமாக அந்த மாநாடு நடத்தப்பட இருந்தது), ஒரு முஸ்லிம் அரசாங்கத்தை அகற்றுதல் அல்லது சுதேச அரசின் அங்கீகாரத்தை வழங்குதல் என்பது எவ்வாறான செயல் என்றால் முஸ்லிம் பிரிவுகள் என்று அழைக்கப்படும் ஒவ்வொன்றும் இதை வெறுக்கின்றது. இதை எண்ணிப்பார்ப்பதை கூட அவர்கள் விரும்புவதில்லை’ என்று கூறினார்கள்.

‘வெறுமனே மாநாடுகளை நடத்துவதாலோ, சொற்பொழிவுகளை நிகழ்த்துவதாலோ வேலை நடக்காது. அதேபோன்று, பணத்தை திரட்டி வெறுமனே பிரசுரங்கள், அறிவிப்புகள் வெளியிடுவதாலும் வேலை நடக்காது. மாறாக இது சம்பந்தமாக உலகின் அனைத்து நாடுகளிலும் முறையாக தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்’ என்றும் அன்னார் துருக்கியின் மேம்பாட்டுக்காக இன்னோர் ஆலோசனையையும் வழங்கினார்கள்.

இன்றும் இதே விஷயத்தைக் குறித்து முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும். அக்காலத்தில் இவ்விஷயத்துடன் துருக்கி அரசாங்கத்துக்கு தொடர்பு இருந்தது. ஆனால் முன்பைவிட இக்காலத்திலோ முஸ்லிம் உலகுக்கும், அரபு உலகுக்கும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. வெறுமனே முழக்கமிடுவதாலோ, கூட்டங்கள் நடத்துவதாலோ பயனிருக்காது. செயல் நடவடிக்கையின் தேவை உள்ளது. துருக்கியர்களுக்கெதிராகவும் முஸ்லிம்களுக்கெதிராகவும் பகைமை மற்றும் மார்க்க துவேஷம் இருப்பதற்கான காரணத்தை எடுத்துரைக்கும்போது இந்த சூழ்நிலை மாறுவதற்கு வழிகாட்டல் வழங்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: ‘முஸ்லிம்கள் தம் தவறுகளில் இருந்து பாவமன்னிப்பு கோரியவாறு இறைவன் பக்கம் திரும்ப வேண்டும். முஸ்லிம்கள் தாமே (முதலில்) இஸ்லாத்தை புரிய வேண்டும். அதன் உண்மைத்துவத்தை புரிய வேண்டும்; பிறருக்கு தெரியப்படுத்த வேண்டும். அதன் மூலமாக தற்போது முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும் துரதிஷ்டமும் நீங்க வேண்டும்.’

எனவே இன்றும் இதே கோட்பாட்டை முஸ்லிம்கள் தமதாக்க வேண்டிய அவசியம் உள்ளது. இல்லையெனில் இஸ்லாத்தின் எதிரிகள் உலகில் உள்ள முஸ்லிம் நாடுகளுக்கு நெருக்கடி கொடுத்துக் கொண்டே செல்வார்கள்; செல்கிறார்கள்.

பிறகு, அனைத்து கட்சி மாநாடு நடந்தது. ‘அனைத்து கட்சி மாநாட்டின் மீது ஒரு பார்வை’ என்ற தலைப்பில் அன்னார் வழிகாட்டல் வழங்கினார்கள். 13 ஜூலை 1925 இல் அன்னார் இந்த பிரசுரத்தை எழுதினார்கள். இந்த பிரசுரத்தின் ஆரம்பத்தில் அன்னார் மார்க்க ரீதியாக அரசியல் ரீதியாக இஸ்லாத்தின் அறிமுகத்தை எடுத்துரைத்தவாறு அனைத்து

முஸ்லிம் பிரிவுகளுக்கு முன்னாலும், அரசியல் விவகாரத்தில் முஸ்லிம்கள் முழுமையான ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற ஓர் அழகிய கோட்பாட்டை எடுத்து வைத்தார்கள். ஏனென்றால், அரசியல் ரீதியாக நீங்கள் ஒரு சமுதாயத்தை விலக்கி வைப்பீர்கள் என்றால் அவர்கள் மற்ற சமுதாயங்களின் பக்கம் செல்ல மாட்டார்கள் என்பது எவ்வாறு சாத்தியமாகும் என்று தெளிவுபடுத்தினார்கள்.

இதற்குப்பிறகு இஸ்லாத்தின் முன்னேற்றம், புகழ் மற்றும் அதற்கான அரசியல் உறுதிப்பாட்டிற்காக சில ஆலோசனைகளை எடுத்து வைத்தார்கள். அமைதியை நிலை நாட்டுவதற்கு ஒருவர் மற்றவரின் மார்க்க விவகாரங்களில் தலையிடாமல் இருக்க வேண்டும் என்றும், பரந்த மனப்பான்மையுடன் மற்றவர்களை அவர்களின் கொள்கைக்கேற்ப செயல்பட விட வேண்டும் என்றும், (முஸ்லிம்கள்) தம் கொள்கைக்கேற்ப செயல் பட வேண்டும் என்றும் அன்னார் கூறினார்கள்.

வியாபாரம், வர்த்தகம் மற்றும் தொழில் தொடர்பாக அன்னார் கூறும்போது, வர்த்தகம் என்பது எவ்வாறான துறை என்றால் முஸ்லிம்கள் மிக அதிகமாக இவ்விஷயத்தில் கவனமின்மையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். தொழில் ரீதியாக அவர்கள் இந்துக்களுக்கு அடிமையாக ஆகி விட்டார்கள். (அப்போது இந்த நிலைதான் இருந்தது. இன்றைய காலகட்டத்தில் இவ்விவகாரத்தில் நாம் உலக அரசாங்கங்களுக்கும், வியாபாரிகளுக்கும் அடிமையாக ஆகிவிட்டோம். ஆகவே, முஸ்லிம் அரசாங்கங்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.)

சில முஸ்லிம் நாடுகளில் குறிப்பாக அஹ்மதிகள் தொடர்பாக, இவர்கள் காஃபிர்கள் ஆவார்கள் என்ற சிந்தனை உள்ளது. பொதுவாக ஒவ்வொரு பிரிவும் மற்ற பிரிவுகளை காஃபிர் என்று கூறுகிறது. முஸ்லிம் அல்லாத உலகில் இதன் காரணமாகவே தவறான தாக்கம் ஏற்படுகிறது. இந்த விஷயம் முஸ்லிம்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. இந்த நுட்பமான கருத்தை இன்றும் முஸ்லிம் அரசாங்கங்களும், முஸ்லிம்களும் புரிய வேண்டிய தேவை உள்ளது.

இந்தியா பாக்கிஸ்தானின் அப்போதைய சூழ்நிலையைக் குறித்து வட்ட மேசை மாநாடு நடைபெற்றது. அப்போது முஸ்லிம்களின் பிரதிநிதியாக யார் இருப்பார்கள் என்ற கேள்வி எழுந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஆங்கிலேய அரசிடம், அரசியல் கட்சிகளின் ஆலோசனையுடன் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அதனால் மாநாட்டின் தீர்ப்புகளை மக்கள் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார்கள் என்று ஆலோசனை கூறினார்கள். அதேபோன்று, இந்தியாவின் அப்போதைய அரசியல் சூழ்நிலைக்கான தீர்வைக் குறித்து ஒரு கட்டுரை எழுதினார்கள். அதில் முஸ்லிம்களின் உரிமைகள், கோரிக்கைகள் குறித்து முழுமையான முறையில் விவாதித்துள்ளார்கள். அதில் உள்ள அறிவுப்பூர்வமான விஷயத்தை வெளிக்கொணர்ந்தார்கள். அத்துடனே அன்னார் இந்தியாவின் அரசியல் விவகாரங்களுக்கு மிக அறிவுப்பூர்வமாகவும், திருப்தி அளிக்கும் வகையிலும் தீர்வை கூறினார்கள். வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் படித்து பயனடையும் வகையில் அதனுடைய முழுமையான, ஆக்கப்பூர்வமான பகுப்பாய்வின் ஆங்கில பதிப்பை வெளியிடுவதற்காக உடனடியாக அனுப்பி வைத்தார்கள். முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு குறிப்பாக அதன் மூலம் பயன் கிடைத்தது. அன்னாருடைய இந்த நூல் இந்தியா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் மிகவும் வரவேற்கப்பட்டது. அது மிகுந்த கவனத்துடனும் ஆர்வத்துடனும் படிக்கப்பட்டது. பல ஆய்வாளர்களும், அரசியல்வாதிகளும், பத்திரிக்கையாளர்களும் புகழ்ந்தவாறு அன்னாருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

*ஹுஸூர் அவர்கள் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்களில் இருந்து இது தொடர்பாக சிலவற்றை உதாரணமாக எடுத்து வைத்தார்கள்.*

கராச்சியின் MLA -வாக இருந்த சர் அப்துல்லாஹ் ஹாரூன் என்பவர் கூறுகிறார்: ‘என்னைப் பொறுத்தவரை அரசியல் தொடர்பாக எந்த அளவு நூல்கள் இந்தியாவில்

எழுதப்பட்டுள்ளனவோ அவற்றுள் இந்த நூல் இந்திய அரசியல் விவகாரங்களுக்கான தீர்வும் மிகச் சிறந்த படைப்பும் ஆகும்.'

உலகின் தற்போதைய நிம்மதியற்ற நிலைக்கு இஸ்லாம் என்ன தீர்வை வழங்குகிறது என்பது தொடர்பாகவும் அன்னார் எழுதினார்கள். உலகளாவிய அமைதியை கருத்தில் கொண்டவாறு 9 அக்டோபர் 1946 இல் டில்லியில் இந்த சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.

இஸ்லாமிய நடைமுறை தொடர்பாகவும் இஸ்லாமிய சட்டம் தொடர்பாகவும் அன்னார் தம் கருத்தை வெளியிட்டார்கள். அந்த சொற்பொழிவு பொது மக்களின் பயனுக்காக 18 பிப்ரவரி 1948 இல் ஒரு பிரசுரம் வடிவில் வெளியானது. அந்த சொற்பொழிவில் இஸ்லாமிய நடைமுறை தொடர்பாக விவரிக்கும்போது, ஆட்சியின் அடித்தளம் முழுவதுமாக இஸ்லாமாக இருக்காது. ஏனென்றால், அது சாத்தியமே கிடையாது. ஆனால் ஆட்சியின் செயல் முறை இஸ்லாமிய முறைப்படி இருக்கும். முஸ்லிம்கள் விஷயத்தில் அதன் சட்டமும் இஸ்லாமிய சட்டமாக இருக்கும். இதைத்தான் இஸ்லாம் விரும்புகிறது. இந்துக்களும், கிறிஸ்தவர்களும், யூதர்களும் இஸ்லாமிய முறைப்படி செயல்பட வேண்டும் என்று இஸ்லாம் ஒருபோதும் கூறவில்லை. மாறாக இஸ்லாம் இதற்கு முற்றிலும் எதிராக உள்ளது.

பிறகு, இரண்டாம் உலகப்போரில் ரஷ்யா போலந்துக்குள் நுழைவது தொடர்பாக தம் கருத்தை எழுதியுள்ளார்கள். இரண்டாம் உலகப்போரின் போது ரஷ்யா போலந்துக்குள் நுழைந்தபோது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த கட்டுரையை எழுதினார்கள். அந்த கட்டுரையில் அன்னார் ரஷ்யா போலந்துக்குள் நுழைவதற்கான காரணங்கள் குறித்தும், நோக்கங்கள் குறித்தும் விவரித்துள்ளார்கள்.

உலகளாவிய நிலைமைகள் மீதும் அன்னாருக்கு ஆழமான பார்வை இருந்தது. இது தொடர்பாக அன்னாருடைய இன்னும் பல கட்டுரைகள் உள்ளன. மார்க்க இலக்கியங்கள், விளக்கவுரைகள் போன்றவை அசாதாரணமான எண்ணிக்கையில் உள்ளன. ஜுமுஆ குத்பாக்கள், ஜமாஅத் மாநாடுகள், கூட்டங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் போன்றவை அறிவு ஞானத்தின் ஒரு கருவூலம் ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் முன்னறிவிப்பில் அல்லாஹ் என்னென்ன வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறானோ அவற்றை எல்லா வகையிலும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் (ரலி) அவர்களிடத்தில் முழுமையடையச் செய்து காட்டினான். சில உதாரணங்களை நான் உங்களுக்கு முன்னால் எடுத்து வைத்தேன். அன்னாருடைய அறிவு ஞானத்தின் அந்த இலக்கியங்களையும் நாம் படிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். பல விஷயங்கள் இன்றைய கால சூழ்நிலைகளோடு ஒத்துப் போகின்றன. அவற்றிலிருந்து நாம் பயனடைய முடியும். அதற்கு அல்லாஹ் நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ

يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى

وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)